**தலைப்பு 225 – இலங்கை பொலிசு**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பொலிசின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிசின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிசுக்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்தோபர் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை பொலிஸின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில்

உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஆண்டு இறுதிப் பெறுமதி ACA-6 படிவத்தின் பிரகாரம் ரூபா 25,386,230,978 ஆக இருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரியின் சொத்துக்கள் அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 20,735,157,569 ஆக இருந்ததனால் ரூபா 4,651,073,409 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இம் மாற்றங்களுக்காக உரிய விடயங்களை வெளிப்படுத்த வேண்டியதுடன் விரைவாக சரி செய்தல் வேண்டும். | அனைத்து சொத்துக்களையும் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்குதல் விரைவாகச் செய்யப்படும். |
| (ஆ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 1,502,298,747 ஆக இருந்ததுட்ன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களின் (iii) இற்கு | இந்த வித்தியாசத்திற்காக உரிய விடயங்களை வெளிப்படுத்தி சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | இணங்க பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 1,470,923,575 ஆக இருந்ததனால் ரூபா 31,375,172 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு II இன் கீழான ஆரம்ப மீதியை பதிவு செய்யும் போது 32 நட்ட விடயங்கள் தொடர்பாக 14,645,410 அதிகரித்தும் இரண்டு நட்ட விடயங்கள் தொடர்பாக ரூபா 234,593 குறைத்தும் பதிவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே ஆண்டின் இறுதியில் பதிவழிக்கப்படாத இறுதி மீதி ரூபா 9,151,618 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நட்ட விடயங்கள் தொடர்பாக சரியான பெறுமதியை உள்ளடக்கி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |

### 1.6.2 பொது வைப்புக்கள்

மீளாய்வாண்டின் இறுதி வரை 2 ஆண்டுகளை மிகைத்த வைப்புக் கணக்குகளின் மீதிப் பெறுமதி ரூபா 246,891,352 ஆக இருந்ததுடன் இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டின் போது சார்க் பயங்கரவாதம் மற்றும் போதைப் பொருள் குற்றங்கள் அவதானிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்தியா விடமிருந்து கிடைத்துள்ள ரூபா 11,503,192 பணத்தி லிருந்து உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப் பட்டிருந்தது. | உரிய குறிக்கோளுக்காக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல் வேண்டும். | நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முறையற்ற பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றியதன் காரணமாக நிறுத்தப்பட்ட 67 செயற்திட்டங்கள் தொடர்பாக காணப்படுகின்ற தீர்த்து வைத்தல் நடைமுறையானது | பெறுகை நடைமுறையிலுள்ள சிக்கல்களை விரைவாகத் தீர்த்து காலாவதியான வைப்புக்களை தீர்த்து வைத்தல் வேண்டும். | தீர்த்து வைத்தல் நடைமுறையானது இதுவரை முடிவுறுத்தப்படவில்லை. |

இதுவரை முடிவுறுத்தப்படாததன் காரணமாக தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்த 5 ஆண்டுகளுக்கும் 7 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டதான கட்டிடங்கள் பிரிவின் கீழுள்ள வைப்புக்களின் பெறுமதி ரூபா 202,223,782 ஆகும்.

### 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் இலங்கை பொலிசின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தயாரித்து பேணப்பட்டு வருகின்றதாக பிரதான உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்காக தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தும் அம்மீளாய்வினை எழுத்து மூலம் செய்து அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தும் அவ்வாறான மீளாய்வு செய்யப்பட்டது என்பதற்கான வெளிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அது சம்பந்தமாக உப கணக்குகள் பிரிவில் மேற்கொண்ட உள்ளக கணக்காய்வு பரீட்சிப்பு அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு சம்பந்தமாக போதியளவான கணக்கீட்டு நடைமுறையையும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையையும் பேணுவதற்காக கடன்கள் மற்றும் முற்பணங்கள் பதிவேடு, கடன்கள் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடு முதலியவற்றை முறைப்படியாக எழுதி கோவை செய்யப்பட வேண்டுமெனவும் மாதாந்தம் திணைக்கள ஏடுகள் திறைசேரி ஏடுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டது என்பதற்கு சான்றுப்படுத்தி கணக்கிணக்கக் கூற்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கவேண்டுமென 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் அவ்வாறு சான்றுப்படுத்தி சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கைய்ன பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

## 1.6.4 முற்பணக் கணக்கு மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முற்பணங்கள் தொடர்பாக திணைக்கள ஏடுகளின் பிரகாரம் மீதி ரூபா 954,557,613 ஆக இருந்த போதிலும், திறைசேரி ஏடுகளின் பிரகாரம் மீதி ரூபா 955,341,942 ஆக இருந்ததனால் ரூபா 784,329 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | மீதிகளின் வித்தியாசங்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது தகவல்களைப் பரீட்சித்து உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் திணைக்கள ஏடுகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 954,557,613 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான தனித்தனி மீதிகளை வகைப்படுத்தல் மீதியின் முழு மொத்தம் ரூபா 873,216,435 ஆகும். அதற்கிணங்க ரூபா 81,341,178 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அந்த வித்தியாசத்தை இனங்கண்டு தேவையான செம்மையாக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வித்தியாசங்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இவ்வித்தியாசங்களை வருடாந்தம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடன் மீதிகளை பதிவு செய்தல் தவறுகள், கைவிடுதல் தவறுகள் இடம்பெற்றிருந்ததுடன் வித்தியாசத்தை ஒரே தடவையில் முடிவுறுத்துதல் நடைமுறையில் சிக்கலானதாக உள்ளது. |
| (இ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகவிருந்த 3533 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய மீதிகள் ரூபா 79,733,034 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அவற்றிற்கு மத்தியில் 03 ஆண்டுகளை மிகைத்து நிலுவையாகவிருந்த கடன் மீதிகள் ரூபா 57,201,540 மொத்தமாக இருந்தது. | நிலுவையாக இருந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவையாகவிருந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக கடன்களை அறவீடு செய்யும் பிரதான பிரிவினைத் தொடர்பு கொண்டு பிரிவு மட்டத்தில் கடனை அறவீடு செய்யும் குழுவினைத் தோற்றுவித்து கடன் பணத்தை தவணை அடிப்படையில் அறவீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 04 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,091,000,000 மொத்த மூலதனச் செலவுகளின் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 300,709,393 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்புக்கள் 24 சதவீதத்திலிருந்து 42 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதி ஏற்பாடானது உச்ச அளவான செயற்திறனுடன் பயன்படுத்துதல் வேண்டும். | கட்டுநிதி கிடைக்காமையைப் போல பாதகமான காலநிலை, தொழில்நுட்ப தவறுகள், செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாமை ஆகிய விடயங்கள் இதற்கு தாக்கமளித்துள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2011 இன் 44 ஆம் இலக்க தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவன அதிகாரச்சட்டத்தின் 25(1) மற்றும் 25(4) ஆம் பிரிவுகளின் பிரகாரம் பயிற்சி நிறுவனங்களில் முறைப்படியாக கணக்கேடுகளை வைத்திருப்பதற்கும் அனைத்து வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாகவும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாகவும் ஏனைய அனைத்து நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவும் கணக்கு வைத்திருத்தலும் பயிற்சி நிறுவனங்களின் வருடாந்த கணக்குகளைத் தயாரித்தலும் கணக்காளரினால் மேற்கொள்ளப்பட | தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனங்கள் அதிகாரச் சட்டத்திலுள்ள பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | பொலிஸ் பயிற்சி நிறுவனங்கள் அதிகாரச்சட்டத்தின் V ஆம் பகுதியில் உள்ளடக்கப்பட்ட ‘‘பணம்’’ சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்குரிய ‘‘தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனங்களுக்கான நிதியத்தை’’ தோற்றுவித்தலும் அதிகாரச்சட்டத்தில் அது தொடர்பாக 22 இலிருந்து 28 வரையான செயற்பாடுகளும் கடமைகளும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ‘‘நிதியத்தை’’ தோற்றுவித்து உரிய பணிப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கற்கை நெறிகளுக்காக கட்டணங்கள் அறவிடப்படுவதனால் நிதியம் தோற்றுவிக்கப்பட வில்லை. |

## 3.2 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தினைத் திருத்தும் தேவைப்பாடு 2014 ஆம் ஆண்டின் போது அடையாளம் காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க திருத்தம் செய்யப்பட வேண்டிய 16 துறைகளும் இனங்காணப்பட்டிருந்தன. நிகழ்கால மற்றும் எதிர்கால சமூக ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்கு பொருந்துகின்ற வகையில் நாளதுவரையாக்கி திருத்தம் செய்வதற்காக 2014 நவம்பர் 19 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்திருந்தும் 2020 யூன் | இனங்காணப்பட்ட துறைகளுக்குரிய சட்டங்கள் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். | பொதுமக்களின் கருத்துக்களையும் பிரேரணைகளையும் விசாரித்தல் இடம்பெற்றுள்ளதுடன் அதன் பின்னர் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. 2020 மே மாதம் பொலிஸ் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்யும் தேவைப்பாடு சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சு பொலிஸ் மா அதிபரிடமிருந்து அறிக்கையினைக் கோரியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மாதம் வரை கட்டளைச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | இலங்கை பொலிசிற்காக ஒரு பல்கலைக்கழகத்தினை ஸ்தாபிப்பதற்கு 2015 ஆம் ஆண்டின் போது அடையாளம் காணப்பட்டிருந்ததுடன் உத்தேச பல்கலைக்கழகத்திற்காக அத்திடிய பிரதேசத்தில் 16 ஏக்கர் காணி தெரிவு செய்யப்பட்டிருந்தது. பிரித்தானிய நோட்டன்ஹேம், லிவர்பூல் என்பவற்றைப் போல அவுஸ்ரேலியாவின் டீகின் பல்கலைக்கழகத்தின் உதவியும் இதற்காகப் பெற்றுக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவிப்பதற்குத் தேவையான சட்டத்தை அங்கீகரித்துக் கொள்ளுதல் 2020 யூன் மாதம் வரை இடம்பெற்றிருக்கவில்லை. | பல்கலைக் கழகத்தை தோற்றுவிப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பல்கலைக்கழகத்தை தோற்றுவிப்பதற்காக செயற்படாதுள்ள செயற்பாட்டுக் குழுவினை மீண்டும் ஸ்தாபிப்பதற்கும் கருதுகோள் பத்திரத்தினை மீண்டும் தயாரிப்பதற்கும் 2020 யூலை மாதம் உத்தேசிக்கப் பட்டிருந்ததுடன் அதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. |
| (இ) | இலங்கை பொலிசின் தற்பொழுது காணப்படுகின்ற குறைபாடுகளையும் பலவீனங்களையும் இனங்கண்டு முறைப்படியாக நாளதுவரையாக்குவதற்கு பிரேரனைகளைச் சமர்ப்பிப்பதற்கும் எதிர்காலத்தில் சிறப்பாக மற்றும் ஆக்கபூர்வமாக பொலிஸ் சேவையை நாட்டில் ஸ்தாபிப்பதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிக்கும் குறிக்கோளில் தோற்றுவிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை ‘‘பொலிஸ் மீளமைப்பு செயல் நடவடிக்கைத் திட்டமாக’’ 2017 மே 31 ஆந் திகதி வெளிப்படுத்தப்பட்டு 2020 யூன் வரை அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அடையாளங் காணப்பட்டுள்ள மீளமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | செயல் நடவடிக்கை குழு செயற்பாடற்றுக் காணப்படுவதனால் மீண்டும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தண்டப்பணம் அறவிடுவதனை விரைவு படுத்துவதற்கும் அரசாங்க வருமானத்திற்கு ஒன்று சேரக்கப்படுகின்ற தண்டப்பணத்தின் அளவை அதிகரிப்பதற்கும் பொது மக்களுக்கு தண்டப்பணம் செலுத்துவதனை வசதியளித்து கொடுப்பதற்குமான குறிக்கோளில் மோட்டார் வாகனக் குற்றங்களுக்காக சுயமாக தண்டப்பணத்தை செலுத்தும் நடைமுறையினை ஸ்தாபிப்பதற்காக 2014 ஆம் ஆண்டிலிருந்து திட்டமிடப்பட்டு வந்திருந்தும் இன்றுவரை உரிய நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | இனங்காணப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் சுயமாகத் தண்டப்பணத்தை செலுத்தும் நடைமுறையினைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |
| (உ) | பொலிஸ் உப சேவையின் அறக்கொடைத் திட்டத்தை கலைத்ததன் பின்னரான நலன்களாகிய ரூபா 65 மில்லியன் பணம் 2009 ஒக்தோபர் 01 ஆந் திகதி “பொலிஸ் மருத்துவ சேவை நிதியம்” ஆக முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்தின் 4 வைப்புக்களை உள்ளடக்கிய மொத்த மீதி ரூபா 133,624,248 ஆகக் காணப்பட்டிருந்தும் 10 ஆண்டுகள் காலமாக நிதியத்தின் அங்கத்தவர்களுக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கும் நலன்களைச் செலுத்துதல் கைவிடப்பட்டிருந்தது. | நிதியத்தினை தோற்றுவிக்கும் குறிக்கோளை நிறைவேற்று வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஊ) | 2009 இன் 10 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மோட்டார் வாகன குற்றங்கள் இடம்பெறுகின்ற தடவைகளின் பிரகாரம் தண்டப் பணத்தை அறவீடு செய்யும் | மோட்டார் வாகன சட்டங்களை மீறுகின்ற குற்றவாளி களிடமிருந்து அக்குற்றங்களை மேற்கொள்கின்ற தடவைகளின் | கணனி தரவு முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | முறைமையை அமுல்படுத்துதல் 2019 யூன் 20 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், மோட்டார் வாகன குற்றங்கள் சம்பந்தமான குற்றவாளிகள் ஒரே குற்றத்தை மேற்கொள்கின்ற தடவைகளின் எண்ணிக்கையை தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் தரவுகளை கணனிமயப்படுத்தும் முறைமையானது இலங்கை பொலிசில் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக ஒரே குற்றத்தை பல தடவைகள் மேற்கொள்கின்ற குற்றவாளிகளிடமிருந்து சரியான தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | எண்ணிக்கையை இனங்காணக்கூடிய கணனி தரவு முறைமையை ஸ்தாபித்து அதற்கிணங்க நிர்ணயிக்கப்பட்ட தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (எ) | பொலிஸ் CCTV பிரிவின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற கொழும்பு நகரத்தின் 33 இடங்களில் பொருத்தப்பட்டுள்ள 108 கமராக்கள் 2008 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வைகளாகும். இக்கமரா முறைமை ANALOG வகையானதுடன் DIGITAL முறைமைக்கு மாற்றுவதனைப் போல நவீன தொழில்நுட்பத்திற்குப் பொருந்தும் வகையில் பரிமாற்றம் செய்ய வேண்டியதுடன் அதன் மூலம் தரவுகளை பகுப்பாய்வு செய்யக்கூடிய வீடியோ தரவுகளின் தெளிவான தன்மை, தரவுகளை அனுப்பும் இயலுமை தரவுகளை களஞ்சியப்படுத்தும் இயலளவை அதிகரிக்கும் இயலுமை, இயற்கையாகவே வீடியோ சனலுக்கு | நிகழ்காலத்திற்குப் பொருந்தும் வகையில் கமரா முறைமையை நாளதுவரையாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கமரா முறைமையை நாளதுவரையாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பார்வைகளை அனுப்பி வைப்பதற்குப் பதிலாக தேவைப்படுகின்ற விசேடத்துவமான சந்தர்ப்பங்களை சுயமாகவே திரையின் மீது காட்டும் இயலுமை ஆகிய நடவடிக்கைகளின் செயற்திறனையும் விளைதிறனையும் மேலும் மேம்படுத்த வேண்டியிருந்தும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | பொலிஸ் நிலைய அலுவலகம் மற்றும் ஏனைய பயன்பாட்டிற்கான காணிகளையும் கட்டிடங்களையும் பொறுப்பேற்கும் 406 செயற்பாடுகள் 2020 யூலை 31 ஆந் திகதி வரையயும் முடிவடைந்திருக்கவில்லை. இக்காணிகளையும் கட்டிடங்களையும் இலங்கை பொலிசு பயன்படுத்துதல் நீண்டகாலமாக இடம்பெற்றிருந்தும் பொறுப்பேற்றல் மற்றும் சுவீகரித்தல் நடவடிக்கையினை முறைப்படியாக ஆரம்பித்தல் 2010 ஆம் ஆண்டின் பின்னர் இடம்பெற்றிருந்தது. | காணிகளைச் சுவீகரித்தல் மற்றும் பொறுப்பேற்றலினை விரைவு படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தகவல் தொழில்நுட்ப பிரிவினால் இலங்கை பொலிசுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மக்களை நிருவகிக்கும் கணனி நிகழ்ச்சித் திட்டத்திற்கு தரவுகளை உள்ளடக்குதல் 05 | தகவல் தொழில்நுட்ப பிரிவினால் இலங்கை பொலிசுக்கு அறிமுகப்படுத்தப் பட்டுள்ள மக்களை நிருவகிக்கும் | கருத்துரைகள் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கட்டங்களின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 44 பிராந்திய பொலிஸ் பிரிவுகள், 65 செயற்பாட்டுப் பிரிவுகள் மற்றும் அதிரடிப் படைகளை உள்ளடக்கிய 84,000 ஒட்டுமொத்த உத்தியோகத்தர்களுக்கு மேற்பட்ட அளவானவர்களின் தகவல்களை கணனி மயப்படுத்துதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்தும் உத்தியோகத்தர்களை இனங்காணும் தொடக்க கட்டத்தின் தகவல்களைத் தவிர்த்து ஏனைய 04 கட்டங்களின் தரவுகளை உள்ளடக்கும் செயல் முன்னேற்றம் (பதவியுயர்த்துதல், இடமாற்றல்கள், குடும்பத்தின் தகவல்கள், கல்வித் தகைமைகள், விடுமுறை, சம்பளங்கள் போன்றன) 25 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. பொலிஸ் நிலைய மட்டத்தில் தரவுகளை உள்ளடக்குவதற்காக காட்டுகின்ற பங்களிப்புக்கள் போதியளவில் இல்லாமை இதற்கு காரணமாக இருந்தது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | நிகழ்ச்சித் திட்டத்திற்கு தரவுகளை உள்ளடக்குவதனை விரைவு படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஆ) | இலங்கை பொலிசுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ள 87,000 பொலிஸ் உத்தியோகத்தர்களின் மற்றும் ஓய்வுபெற்ற 20,000 உத்தியோகத்தர்களின் கோவைகளும் உரிய ஏடுகளும் மனிதவளங்கள் முகாமைத்துவ பிரிவின் மட்டுப்படுத்தப்பட்ட நில அளவுக்குள் இறாக்கைகளின் மீது வைக்கப்பட்டிருந்தன. இந்த இறாக்கைகளும் உக்கிப் போயிருந்ததனால் 2018 நவம்பர் மாதம் கட்டிட | கட்டிடப் பிரிவினால் வழங்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் இறாக்கைகளிலுள்ள கோவைகளில் அரைவாசியை மிகவும் விரைவாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து கோவைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் இந்த இறாக்கைகளால் தாங்க முடியாத அளவில் கோவைகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தனால் மிக விரைவாக இவற்றில் அரைவாசியளவில் அகற்றப்பட வேண்டுமென தெரியப்படுத்தியிருந்தும் 2020 ஆகஸ்ட் இறுதி வரையும் அக்கோவை அவ்வாறே களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன. இப்பிரிவில் சேவையில் ஈடுபட்டுள்ள 150 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்களின் பாதுகாப்பதனைப் போல் இக்கோவைகளின் பாதுகாப்பிற்கும் இந்நிலைமை தடையாக இருந்தது. | | |
| (இ) | யாழ்ப்பாண பொலிஸ் பிரிவிற்குரிய பொலிஸ் அலுவலகங்கள், நிருவாகக் கட்டிடங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள் வருகையாளர் இல்லங்கள் என்பன செயற்படுகின்ற மொத்தமாக 28 ஏக்கர்கள் அளவான 67 காணித் துண்டுகளுக்கு மத்தியில் பொலிஸ் திணைக்களத்திற்கு உரிமையாகக் காணப்படுவது 03 காணித் துண்டுகளின் மொத்தமாக 07 ஏக்கர்கள் 146 பேச்சர்ஸ்கள் மாத்திரமாகும். ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான 08 ஏக்கர்கள் அளவான 09 காணித் துண்டுகளும் தனியார் தரப்பினர்களுக்குச் சொந்தமான மொத்தமாக 13 ஏக்கர்களை மிகைத்த 55 காணித்துண்டுகள் யுத்த சூழ்நிலையின் பின்னரும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பொலிசின் நடவடிக்கைகளுக்காக | பொலிசிற்குச் சொந்தமில்லா திருந்தும் பயன்படுத்துகின்ற காணிகளின் உரிமையை பொறுப்பேற்றல் அல்லது கொள்வளவு செய்தல் விரைவாக மேற்கொள்ளப் படுதல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்தும் உரிமையை பொறுப்பேற்றல் அல்லது கொள்வனவு செய்தல் நடவடிக்கையானது 2020 சனவரி மாதம் வரையும் முடிவடைந்திருக்க வில்லை. | | |
| (ஈ) | வவுனியா மாவட்ட ஆயுதக் களஞ்சியத்தில் 2018 ஆம் ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது 19T-56 துவக்குகளின் மிகைகள் இனங் காணப்பட்டிருந்ததுடன் பின்னர் வெளிக்கள படை தலைமையகத்தின் தகவல்களுடன் ஒப்பீடு செய்த போது களஞ்சியத்தில் உள்ள 1380 T-56 துவக்குகளில் 1,303 மாத்திரம் பொலிசுக்குரியவை என இனங்காணப்பட்டிருந்தது. யுத்த சூழல் காணப்பட்ட சமயத்தில் ஆயுதங்கள் தொடர்பாக தீரக்கமாக ஏடுகள் பேணப்படுதல் இடம்பெற்றிருக்காமையின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள இந்த ஆயுதங்கள் சம்பந்தமான சிக்கலை தீர்த்து வைத்தல் 2020 ஆகஸ்ட் வரை முடிவடைந்திருக்கவில்லை. | இந்த ஆயுதங்கள் சம்பந்தமான சிக்கலை தீர்த்து வைத்தல் விரைவாகச் செய்யப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்கள் சம்பந்தமாக இணக்கப்பாடு வெளிப்படுத்தப்பட்டது. |
| (உ) | மீளாய்வாண்டின் போது பெண்களுக்கு ஏற்பட்டிருந்த பிரதான குற்றங்களான பாரியளவு காயங்களை ஏற்படுத்துதல், பெண்கள் துஷ்பிரயோகம், கொலை செய்தல் என்பன தொடர்பாக அறிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் முறையே 208, 199 மற்றும் 95 ஆகும். எனினும் தீர்வு காணல் சதவீதம் முறையே 37, 31 மற்றும் 45 என்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | மகளிருக்கு ஏற்பட்டிருந்த பிரதான குற்றங்களை தீர்த்து வைக்கும் சதவீதத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரதான குற்றங்களான துஷ்பிரயோகம், பாலியல் துஸ்பிரயோகங்கள் மற்றும் கடத்தல்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் முறையே 1576, 623 மற்றும் 606 ஆக இருந்தன. எனினும் தீர்த்து வைத்தல் சதவீதம் முறையே 58, 50 மற்றும் 56 என்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாரிய குற்றங்கள், மகளிர் துஸ்பிரயோகம், பாரியளவு பாலியல் துஸ்பிரயோகங்கள், கடத்தல்கள் என்பன தொடர்பாக அறிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை தீர்த்துவைக்கும் சதவீதத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (எ) | மீளாய்வாண்டின் போது போதைப் பொருட்கள் சம்பந்தமான குற்றங்கள் அறிவிக்கப்பட்டிருந்தமை 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4,825 ஆல் அதிகரித்திருந்ததுடன் ஹெரோயின் கைப்பற்றப்பட்ட அளவு 1380 கிலோ கிராம்களாலும் ஹெரோயின் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட நபர்கள் 8,672 ஆலும் அதிகரித்திருந்தது. | போதைப் பொருள் புளக்கத்தையும் பயன்படுத்துதலை யும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

## 3.4 பெறுகைகள்

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொலிஸ் சேவையிலுள்ள 60,000 அளவான பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான தலைக் கவசங்கள் (P-Cap) கடைசியாக கொள்வனவு செய்யப்பட்டது 2013 பெப்ரவரி மாதத்திலாகும். பயிற்சி உத்தியோகத்தர்களுக்குத் | உத்தியோகத்தர் களுக்குத் தேவையான தலைக் கவசங்களை தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான அளவினை சிறிய அளவில் பின்னர் கொள்வனவு செய்திருந்தும் வருடாந்தம் தலைக் கவசத்தின் அளவை சரியாக மதிப்பீடு செய்து கொள்வனவு செய்யப்படாமையினால் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மேற்கூறிய உத்தியோகத்தர்களுக்கு தலைக்கவசங்கள் கிடைத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை பொலிசுக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள்களை உள்ளடக்கிய மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 10,123 ஆக இருந்ததுடன் அவற்றில் 1,561 ஜீப் வண்டிகளாகும். இந்த ஜீப் வண்டிகளில் 909 அல்லது 58 சதவீதமானவை 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் அதாவது 15 ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவைகளாகும். கடந்த 05 ஆண்டுகளில் 21 ஜீப் வண்டிகள் மாத்திரம் வாகன குளாமில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன. இந்நிலைமையில் பொலிஸ் கடமையை நிறைவேற்றுவதற்கு புதிய ஜீப் வண்டிகளை கொள்வனவு செய்யும் தேவைப்பாட்டினை இனங்கண்டு 2018 ஆகஸ்ட் 08 ஆந் திகதி அமை/18/1650/828/10-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 750 ஜீப் வண்டிகளை (விசேட அதிரடிப்படைக்கான 150 ஜீப் வண்டிகளை உள்ளடக்கி) இந்திய கடன் திட்டத்தின் (Indian Line of Credit) கீழ் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. இது தொடர்பாக பெறுகை நடவடிக்கை 2020 ஆகஸ்ட் மாதம் வரையும் தாமதித்து | அங்கீகாரம் கிடைத்திருந்த இந்திய கடன் திட்டத்தின் கீழ் 750 ஜீப் வண்டிகளை கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கைகளை விரைவுபடுத்தி ஜீப் வண்டிகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | இடம்பெற்றதன் காரணமாக பொலிஸ் நிலையம், பொலிஸ் பிரிவு மற்றும் விசேட பிரிவுகளில் கடமைகளை மேற்கொள்ளும் போது போக்கவரத்துச் சிக்கல் ஏற்பட்டிருந்தது. | | |
| (இ) | பொலிசில் பரிசோதகர் தரத்திலுள்ள உத்தியோகத்தர் களுக்கு கொழும்பு பிரதேசத்தில் தங்குமிட வசதிகளை வழங்குதலினை உள்ளடக்கி சிக்கலைக் குறைப்பதற்கு அந்த உத்தியோகத்தர்களுக்காக தங்குமிட வசதிகள், உணவுச் சாலைகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகளை வழங்குவதற்காக கொம்பனி வீதியில் 06 மாடிகளைக் கொண்ட ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2018 மார்ச் 07 ஆந் திகதிய அமை/180342/748/012 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் கீழ் மொத்த கிரயம் ரூபா 468,272,027 இற்கு 2018-2020 மத்திய கால பாதீட்டு கட்டமைப்பிற்குள் நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும், 2020 ஆகஸ்ட் மாதம் வரை ஒரு நிர்மாண ஒப்பந்தக்காரர் இதற்காக தெரிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | ஒப்பந்தக்காரர் ஒருவரை விரைவாகத் தெரிவு செய்து நிர்மாணத்தை விரிவுபடுத்துதல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | இலங்கை பொலிசுக்குத் தேவையான சீருடை விடயங்கள், (தோல் சப்பாத்து - PS/PC, விளையாட்டு சப்பாத்து - PS/PC மற்றும் மழை கோட் - Rain Coat - Woman என்பவை) வெடி மருந்துகள் பிஸ்டோல் (Ammunition, Pistols) தளபாட உபகரணங்கள் (புத்தக இறாக்கைகள் மற்றும் | உரிய 32 கோவைகளின் பெறுகை நடவடிக்கைகளின் தொழில்நுட்ப மதிப்பீட்டினையும் விபரக் குறிப்பினையும் தயாரித்தலை துரிதமாக மேற்கொண்டு கொள்வனவு | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அலுமாரிகள்) ஆகிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 32 பெறுகைக் கோவைகளின் பெறுகை நடவடிக்கைகளானது தொழில்நுட்ப மதிப்பீடு தொடர்ந்தும் இடம்பெறுகின்றமை, விபரக் குறிப்புக்களை மீண்டும் தயாரித்தல் ஆகிய காரணங்களின் அடிப்படையில் 2020 ஆகஸ்ட் மாதம் வரை முடிவுறுத்தப்பட்டிருக்க வில்லை. | செய்தலை விரைவுபடுத்துதல் வேண்டும். | |
| (உ) | பொலிஸ் உத்தியோகத்தர் களுக்குத் தேவையான விளையாட்டு காலுறைகள் (Sports Socks) 2018 ஆம் ஆண்டிற்காக 150,000 காலுறைகள் ரூபா 18,285,000 தொகைக்கும்2019 ஆம் ஆண்டிற்காக 152,000 காலறைகள் ரூபா 19,699,200 தொகைக்கும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 செம்தம்பரிலிருந்து 2020 மார்ச் வரையான காலத்தில் இந்த விளையாட்டு காலுறைகள் 302,000 அளவானவை பொலிஸ் மா அதிபர் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. 2020 ஆகஸ்ட் மாதம் வரை விளையாட்டு காலுறைகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்திருந்தது. 60,000 விளையாட்டு சப்பாத்துக்களை கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கைகள் 2019 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டு நடவடிக்கை 2020 செப்தெம்பர் மாதமளவில் இடம்பெற்றிருந்தது. இதற்கிணங்க பெறுகை நடைமுறையின் தாமதத்தினால் | பெறுகை நடைமுறைகளை விரைவுபடுத்தி உத்தியோகத்தர் களுக்குத் தேவையான வசதிகளை உரிய சந்தர்ப்பத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

உத்தியோகத்தர்களுக்குத் தேவையான வசதிகள் உரிய சந்தர்ப்பத்தில் கிடைப்பதில் தாமதம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 மார்ச் 19 ஆந் திகதி உயர் பயிற்சி பொலிஸ் கல்லூரியையும் இங்கிரிய பொலிஸ் நிலையத்தையும் நிர்மாணிப்பதற்காக வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு இறுதி வரை ரூபா 8,895,273 செலவு செய்யப்பட்டிருந்தும் நிர்மாண வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. 2008 ஆம் ஆண்டில் பொலிசுக்கு ஒப்படைக்கப்பட்ட 06 ஏக்கர்களிலான இக்காணியையும் தீர்த்து வைக்கப்படாது காணப்பட்டது. | ரூபா 8,895,273 செலவு செய்யப்பட்டு நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்ட உயர் பயிற்சி பொலிஸ் கல்லூரியினதும் இங்கிரிய பொலிஸ் நிலையத்தினதும் நிர்மாண வேலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஒப்படைக்கப்பட்ட 6 ஏக்கர் காணியையும் விரைவாக தீர்த்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை பொலிசுக்குத் தேவையான 271 கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வாடகையாக ரூபா 260,675,352 செலுத்தப்பட்டது. அவற்றுக்கு மத்தியில் கொழும்பு நகரத்தில் அமைந்துள்ள 162,088 சதுர அடியான 15 கட்டிடங்களுக்கான வருடாந்த வாடகை ரூபா 148.28 | பொலிசுக்கான கட்டிடத் தேவையை முறையாக இனங்கண்டு திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனாக இருந்ததுடன் அந்த அனைத்து கட்டிடங்களும் 03 ஆண்டுகளிலிருந்து 08 ஆண்டுகள் வரையான காலத்திற்கு வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களாகும். இந்த வாடகைக் கட்டிடங்களுக்குப் பதிலாக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான நீண்டகாலத் திட்டம் இலங்கை பொலிசிடம் இருக்கவில்லை. | | |
| (இ) | பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் உத்தியோகத்தர்களுக்காக 75000 தலைக் கவசங்களை கொள்வனவு செய்வதற்கு 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட பெறுகை நடைமுறையில் இடம்பெற்ற முறையற்ற விடயங்களினால் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த தீர்ப்பான 75,000 தலைக் கசசங்களுக்கான பணமும் அதற்கான ஏனைய கட்டணங்களையும் செலுத்ததல் இலங்கை பொலிசினால் நிராகரிக்கப்பட்டு தொடர்ச்சியாக நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. 2020 யூன் மாதம் வரை நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாதிருந்ததுடன் வழங்குனரின் களஞ்சியக் கட்டணம் சட்ட கட்டணம், நாணய மாற்று விகிதம், அதிகரித்தலின் பாதகமும் இலங்கை பொலிசினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென வழங்குனரினால் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தது. | வழங்குனருக்கு செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்த களஞ்சிய கட்டணம், சட்ட கட்டணம், நாணயமாற்று விகதங்களின் அடிப்படையில் செலுத்தக்கூடிய பாதகங்களைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து நீதிமன்ற நடவடிக்கைகளை விரைவாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வழங்கப்பட்ட விபரக் குறிப்புகளுக்கு இணங்க தலைக் கவசங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் முறைப்பாட்டுத் தரப்பினர்களுக்குச் செலுத்த வேண்டியுள்ள வட்டி சதவீதம் சம்பந்தமாக மத்திய வங்கியினால் அங்கீகரித்துள்ள அளவீட்டு அலகுகளிற்கு இணங்க கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு முடியாது போனால் கௌரவ உச்ச நீதிமன்றத்திற்கு தடை செய்தல் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானது என உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஹபராதுவ ‘‘நிலசெவன’’ வீடமைப்புத் திட்டத்திலிருந்து ஒரு வீடு ரூபா 3,800,000 வீதம் ரூபா 729,600,000 தொகைக்கு 192 வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கு 2017 திசெம்பர் 29 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. 2009 ஏப்ரல் 02 ஆந் திகதி வரை 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 500 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் ஒரு விடு ரூபா 1,548,000 அளவில் இருக்க வேண்டுமென விளக்கம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 192 வீடுகளின் மொத்த பெறுமதி ரூபா 304.128,000 மாத்திரமாகும். மேலும், ‘‘நில செவன’’ திட்டத்தின் புதுப்பித்தல் சம்பந்தமான நிபந்தனையின் கீழ் 115 வீடுகளை மாத்திரம் அரசாங்க ஊழியர்களுக்கு விற்பனை செய்யக்கூடியதாக இருந்தும் 192 வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | ‘‘நிலசெவன’’ திட்டத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் கொள்வனவு செய்தல் இடம்பெற வேண்டியதுடன் பெறுமதியை மிகைத்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு களுக்காக முறைப்படியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |
| (உ) | 2016 திசெம்பர் மாதம் ரூபா 333,000,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட வெகுனகொட ‘‘நிலசெவன’’ வீடமைப்புச் செயற்திட்டத்தின் 100 வீடுகளுக்கான ஒப்படைப்பு உறுதிப் பத்திரங்கள் 2020 ஆகஸ்ட் மாதம் வரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வீடுகளுக்கான உறுதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வரைபு செய்யப்பட்ட உறுதிப் பத்திரங்களின் பிரதி சட்டப் பிரிவிற்கு கிடைத்துள்ளதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபுகஸ்கந்த பொலிஸ் நிலையம் அமைந்துள்ள 4 ஏக்கர் காணியில் இரண்டு ஏக்கர் அளவான காணி 1981 ஆம் ஆண்டிலிருந்து குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. மேலும் நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலையினை விரிவுபடுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 334 மில்லியன் செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 6 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தின் 4 மாடிகள் 2020 யூன் மாதம் வரை குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | காட்டப்பட்ட குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டுள்ள சொத்துக்களை பயன்படுத்துவதனை விரைவு படுத்தல் வேண்டும். | பதவியணியினர் போதியவில் இல்லாமை இதற்கு காரணமாகக் காட்டி தற்பொழுது புதிதாக 14 வைத்தியர்கள் இரண்டாம் பதவிக்கு விடுவிப்பு அடிப்படையில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை முடிவடைந்துள்ளது எனவும் தாதி உத்தியோகத்தர்களாக 29 நபர்களைச் சேர்த்துக் கொண்டு பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தாதிகள் வெற்றிடங்களுக்காக ஓய்வுபெற்ற பயிற்சி உத்தியோகத்தர்களை முப்படைகளிலிருந்தும் சுகாதார அமைச்சிலிருந்தும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் இந்த ஆட்சேர்ப்புக்களின் பின்னர் கட்டிடத்தை முழுமையாகப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. |
| (ஆ) | பொலிஸ் உத்தியோகத்தர் களின் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாத வகையில் சேதமடைந்த மற்றும் காலவதியாகி நீண்டகாலமாக கொடஹேன பொலிஸ் மா அதிபர் களஞ்சியத்தில் காணப்பட்ட சீருடைகள் மற்றும் பதக்கங்களை உள்ளடக்கிய | பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாத வகையில் சேதமடைந்துள்ள காலாவதியாகியுள்ள சீருடைகள் மற்றும் பதக்கங்களை உள்ளடக்கிய 63 விடயங்களைச் சார்ந்த 77,450 | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 63 விடயங்களைச் சார்ந்த 77,450 அலகுகள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வினாலும் 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுச் சபையினாலும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தும் இன்றுவரை அதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அலகுகள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கையினை விரைவாக எடுத்தல் வேண்டும். | |
| (இ) | பொலிஸ் ஆய்வு நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு மல்வானையில் அமைந்துள்ள 12 ஏக்கர் 1 ரூட் 08 பேர்ச்சர்ஸ் காணியை இலங்கை பொலிஸினால் பொறுப்பேற்பதற்காக 2017 யூன் மாதம் 20 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் 2020 யூலை மாதம் வரை அக்காணியைப் பொறுப்பேற்கும் நடவடிக்கையானது தாமதமாக இடம்பெற்றுக் காணப்பட்டது. | அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த இக்காணியை பொறுப்பேற்றல் தொடர்பான நடவடிக்கையை விரைவாக மேற்கொள்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | பொலிஸ் குதிரைப் படைப் பிரிவு மற்றும் இராணுவ கண்காணிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2017 செம்தெம்பர் 28 ஆந் திகதி பயன்படுத்தும் உரிமை வழங்கப்பட்டிருந்த ஹெரன அல்லகந்த தோட்ட காணியின் 75 ஏக்கர் நிலத்தை உரிய குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. காணியைச் சுற்றி வேலி நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் அதுவும் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | எல்லகந்த தோட்டத்தின் 75 ஏக்கர் காணியை உரிய குறிக்கோள் களுக்காக ஈடுபடுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |

## 4. நல்லாட்சி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியினை உள்ளடக்கிய கணக்காய்வு பதவியணியிலுள்ள 60 பதவிகளில் 28 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை பிரிவில் உயர்ந்த செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு தடையாக இருந்தது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுதல் வேண்டும். | புதிய உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல் விளைதிறனற்றது எனவும், அனுபவமுள்ள உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளும் போது அதற்குப் பதிலாக பதீலீட்டு உத்தியோகத்தர்களை வழங்குவதற்கான இயலுமை இல்லாததன் காரணமாக ஏனைய அனுபவமுள்ள உத்தியோகத்தர்களை விடுவிக்கும் சிக்கல் காணப்பட்டதனால் செயற்திறனான கணக்காய்வு உத்தியோகத்தர்களாக உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. |

## 5. மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) சீருடைப் பதவியணியின் கீழ் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணணப்பட்ட மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 10,092 ஆக இருந்தும் 2020 ஆம் ஆண்டிற்கான ஆட்சேர்ப்புக்களின் 2020 யூலை 31 ஆந் திகதி வரையுமான மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 7,217 ஆகக்காணப்பட்டது. | இலங்கை பொலிசின் நாளாந்த கடமைகளை நிறைவேற்றும் போது தடையாகக் காணப்படுகின்ற உத்தியோகத்தர் பற்றாக்குறையை நீக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அத்திகதியில் உள்ளவாறு சேவையை விட்டுச் சென்ற (VOP) 3514 உத்தியோகத்தர்கள் மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட 895 உத்தியோகத்தர்கள் இருப்பதன் அடிப்படையில் 85,603 பதவியணியில் 11,626 உத்தியோகத்தர்கள் வெற்றிடமாகக் காணப்படுதல் இலங்கை பொலிசின் நாளாந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு தடையாக அமைந்திருந்தது. | | |
| (ஆ) | இலங்கை பொலிசின் சிவில் பதவியணியைச் சேர்ந்த 56 உதவிப் பணிப்பாளர் (சிவில் நிருவாகம்) பதவி, உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) பதவி மற்றும் கணக்காளர் பதவிகளில், 24 பதவிகளும் 11 நிருவாக உத்தியோகத்தர் பதவிகளில் 9 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டமை பொலிசின் நிதி மற்றும் நிருவாகச் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது தடையாகக் காணப்பட்டது. | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்கப்பட்டது. அதற்கிணங்க காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு இன்றுவரை எடுத்த நடவடிக்கைகள் எழுத்து மூலம் தரப்பட்டுள்ளது. |
| (இ) | சீருடைப் பதவியணியின் பிரதான பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பரிசோதகர், உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன்ட், பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகிய 05 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை பின்பற்றப்படாதிருந்ததுடன் உதவியாளர்கள், சேவையில் அங்கீகரித்த பதவிகள் 106 ஆகக் காணப்பட்டிருந்தும் 76 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை. | சீருடைப் பதவியணியினர் மற்றும் உதவியாளர் சேவையின் தேவைப்பாட்டினை நிறைவேற்றிக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்கி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்து கொள்வது சம்பந்தமாக ஒவ்வொரு பதவி தொடர்பாகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உதவியாளர் சேவையில் அங்கீகரித்த பதவியணியினர் 7,615 ஆக இருந்தும் வெற்றிடங்கள் 6,361 அல்லது 83 சதவீதமாகக் காணப்பட்டமை, மருத்துவப் பிரிவின் மற்றும் கட்டிடங்கள் பிரிவின் செயற்பாடுகளைப் போல இலங்கை தகவல் தொழில்நுட்ப மற்றும் கட்டிடங்கள் பராமரிப்பு நடவடிக்கைகளையும் ஆக்கபூர்வமாகப் பேணுவதற்கு தடையாக இருந்தது. | உதவியாளர்கள் சேவையின் அங்கீகரித்த பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையினைத் தயாரித்து தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஆட்சேர்க்க முடியும். |
| (உ) | 2020 யூலை 31 ஆந் திகதியின் பின்னர் மற்றும் 2025 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சீருடைப் பதவியணியின் 9916 உத்தியோகத்தர்கள் மற்றும் உதவியாளர்கள் சேவையின் 270 உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் இந்த வெற்றிடங்களையும் தற்பொழுது காணப்படுகின்ற வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு வருடாந்த திட்டங்கள் (இலக்கிடப்பட்ட திகதிகளை உள்ளடக்கி) மீளாய்வாண்டின் இறுதிவரை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு வருடாந்த திட்டங்களை இலக்கிடப்பட்ட திகதியை உள்ளடக்கி விரைவாக தயாரித்தல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஊ) | பொலிஸ் நிலையம், பொலிஸ் பிரிவு மற்றும் அலுவலக மட்டத்தில் இருக்க வேண்டிய ஒவ்வொரு பதவிக்குரிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை இனங்கண்டு கொள்வதற்காக மேல் மாகாணத்தில் தொடக்க மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ஏனைய 08 மாகாணங்கள் சம்பந்தமான தொடக்க மதிப்பீடு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிலைமையின் | உரிய அலுவலகங்களில் தொடக்க மதிப்பீட்டினை மேற்கொண்டு அலுவலக மட்டத்தில் இருக்க வேண்டிய உத்தியோகத்தர் களை இனங்காண்பதற்கு உரிய நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் ஒவ்வொரு நிலையத்திலும் காணப்படுகின்ற உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை அல்லது மிகைகளை இனங்கண்டு கொள்ள முடியாதிருந்தது. | | |
| (எ) | 2015-2019 காலப்பகுதியில் யாழ்ப்பாணம் தலைமை அலுவலக பொலிசில் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 703 இலிருந்து 483 வரையும், வவுனியா தலைமை அலுவலக பொலிசில் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 464 இலிருந்து 384 வரையும் யாழ்ப்பாண பிரிவில் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1223 இலிருந்து 1081 வரையும் குறைவடைந்திருந்தன. வட மாகாணத்திற்கு வருடாந்தம் இடமாற்றம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் ஏனைய பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொள்ளுதல் இதற்கு காரணமாக இருந்ததுடன் இந்நிலைமையானது வட மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் நாளாந்த கடமைகளைப் பேணுவதற்கு தடையாக இருந்தது. | வட மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் நாளாந்த கடமைகளைப் பேணுவதற்கு தடை ஏற்படாத வகையில் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைவதற்கு நேரொத்த வகையில் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களும் குறைவடைய வேண்டி ஏற்பட்டிருந்தது. அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற புதிய ஆட்சேர்ப்புக்களிலிருந்து இதற்காக இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |